## கேள்வி:

## “தேவன் கிருபையுள்ளவரென்றால், நல்ல, நேர்மையான, உண்மையுள்ள மனிதர்கள் இழந்து போகப்படுவது சாத்தியமா?”

## பதில்:

*மக்கள் பாவமன்னிப்பிற்கான முழுகுதல் ஞானஸ்நானம் பெறும்பொழுது மட்டுமே இரட்சிக்கப்பட முடியும் என்று வேதம் போதிப்பதை நாம் நம்புகின்றோம். பல சமயங்களில் மக்கள் இக்கருத்துக்கு பதில் அளிக்கையில், “ஆம், வேதம் இவ்வாறு போதிப்பதாகவே காணுகின்றோம், ஆனாலும், ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளாமலிருந்தும், மத ரீதியான கோட்பாடுகள் கொண்ட மனிதர்களின் நிலை என்னவாயிருக்கும்? அவர்கள் நல்ல, நேர்மையான, உண்மை யுள்ள ஜனங்களாய் இருக்கின்றார்களே, அவர்கள் இழந்து போகப்படுவது சாத்தியமா?” என்று வினவுகின்றனர். முதலாவதாக, கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற, நல்ல, நேர்மையான, உண்மையுள்ள ஆனால் வேதவசனத்தின்படி ஞானஸ்நானம் பெறாத ஜனங்களைப் பற்றி சிந்தித்துப் பார்ப்போம், இந்த ஜனங்கள் இழக்கப்படுவது சாத்தியமா?*

*நமது ஆய்வை இன்னும் சற்று விரிவாக்குவோம். தங்களை கிறிஸ்தவர்கள் என்று வெளிப்படுத்துகிறவர்கள் மட்டுமே நல்ல, நேர்மையான, உண்மையானவர்கள் என்று கருதுவது தவறாகும். சில மனிதர்கள் தாங்கள் தேவனை நம்புவது முடியாது என்று காண்கின்றனர். இவர்கள் அந்த முடிவில் நல்ல, நேர்மையான, உண்மையுள்ளவர்களாயிருக்கின்றனர். இப்படிப்பட்ட நல்ல, நேர்மையான, உண்மையுள்ள மக்கள் இழந்து போகப்படுவது சாத்தியமா?*

*தேவனை நம்பியும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன்*

*என்று ஏற்றுக் கொள்ளாதவர்களின் நிலை என்ன? தேவனை ஏற்றுக் கொண்டிருந்தும், தேவனுடைய நிறைவான வெளிப்பாடாகிய கிறிஸ்துவை தேவ குமாரன் என்று ஏற்றுக் கொள்ளாத யூதர்கள் அ ல்லது முஸ்லீம்கள் நிலை என்ன? அநேக கிறிஸ்தவர்கள் நல்ல, நேர்மையான, உண்மையுள்ளவர் களாயிருப்பது போலவே, அவர்களும் நல்ல, நேர்மையான, உண்மையுள்ளவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் இழக்கப் பட முடியுமா?*

## வேதாகமம் போதிப்பது என்ன?

*இக்கருத்தைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது? என்ற கேள்வியுடன் நாம் தொடங்குவோம். தேவன் என்ன கூறுகிறார் என்பதில் நாம் கொள்ளும் அக்கறையைப் போல, மற்றவர்கள் எதை நம்புகிறார்கள் என்பதில் நாம் அக்கறை கொள்வதில்லை. தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள அவருடைய நூலாகிய வேதாகமத்தைக் கற்றுக் கொள்வதே ஒரே வழியாகும். வேதாகமத்தின்படியாக இந்த மக்கள் இழந்து போகப்பட முடியுமா?*

*இக்கேள்விக்குப் பதில் அளிக்க, நாஸ்திகர்களிடத்தில் நாம் பின்வரும் கேள்விகளைக் கேட்போம்:*

*"தேவனிடத்தில் விசுவாசம் இன்றி நீங்கள் இரட்சிக்கப்பட முடியுமா?" என்று கேட்போம். 2 தெச. 1:7-9ல் "தேவனை அறியாதவர்களை" நீதியுள்ள ஆக்கினைக்குள்ளாக்கும்படி ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு கிறிஸ்து வருவார் என்று கூறப்படுவதைக் கவனியுங்கள். எபி. 11:6ல் விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம், ஏனென் றால் தேவனிடத்தில் சேருகிறவன், "அவர் உண்டென்று" விசுவாசிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. இது ஒரு வேளை ஒருவர் நாத்திகராய் இருந்தபோதிலும் இரட்சிக்கப்பட முடியும் என்று கூறுவது போலுள்ளதா? நாத்திகர் ஒருவர், தாம் செய்வது தவறாயிருப்பினும், நியாயத்தீர்ப்பின் நாளில் தேவனை எதிர்கொள்ளுகையில், தாம் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டு விடுவாரென்றும், அதன் பிறகு தேவனு டன் நகைச்சுவையாகப் பேசிச் சிரிப்பார் என்றும் கூறினார். ஆனால் வேதாகமத்தின்படியாக, அந்த மாதிரி இருக்கப் போகிறதில்லை!*

இரண்டாவதாக, உண்மையுள்ள கிறிஸ்தவர்கள ல்லாதவர் களிடத்தில்: "கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாமல் நீங்கள் இரட்சிக்கப்பட முடியுமா?" என்று நாம் கேட்கிறோம். வேதம் இதைப்பற்றி என்ன போதிக்கிறது? யோவா. 8:24ன்படி, "... நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களில் சாவீர்கள்" என்று இயேசு கூறினார். யோவா. 14:6ல் அவர், "... என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினி டத்தில் வரான்" என்றார். நாம் இரட்சிக்கப்படுவதற்குக் கிறிஸ்துவின் நாமமேயல்லாமல், வேறோரு நாமம் கட்டளை யிடப்படவில்லை (அப். 4:12). கிறிஸ்தவர்களல்லாதவர்களை நாம் நேசித்து, பாராட்டுமளவுக்கு வேதாகமம் என்ன கூறுகிறது என்பதை ஏற்றுக்கொண்டால், அவர்கள் அவிசுவாசத்தில் நிலைத்திருந்தாலும் இரட்சிக்கப்பட முடியும் என்று நாம் எண்ண முடியாது.

மூன்றாவதாக, கிறிஸ்தவர்கள் என்று தங்களை வெளிப் படுத்தியும், மதரீதியாக தவறானவர்களைக் கவனியுங்கள். பலவீனமான, தவறுகள் செய்கின்ற கிறிஸ்தவர்களைப் பற்றி நாம் இங்கு பேசவில்லை. கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக் கொண்டும், வசனத்தின்படியாக ஞானஸ்நானம் பெறாதவர்களைப் பற்றியே இங்கு நாம் பேசுகின்றோம். அவர்கள் இரட்சிக்கப்படுவார்களா? அவர்களிடத்தில் நாம், "சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமல் நீங்கள் இரட்சிக்கப்பட முடியுமா?" என்று கேட்கின்றோம். நாமகரணக் கூட்டம் ஒன்றில் உறுப்பினராக உள்ள ஒருவரைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அவர் நல்லவராக, நேர்மையுள்ளவராக, தாம் விசுவாசிப்பது எதுவோ அதில் உண்மையுள்ளவராக இருக்கி றார், ஆனால் வேதவசனத்தின்படியாக அவர் ஞானஸ்நானம் பெற்றதில்லை. சுவிசேஷத்தின் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப் படியாமல் அவர் இரட்சிக்கப்பட முடியுமா? 2 தெச. 1:7-9ல் பவுல், "தேவனை அறியாதவர்களிடத் தில்" மட்டும் கிறிஸ்து ஆக்கினையைச் செலுத்துவார் என்று கூறாமல், "அவருடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களிடத்திலும்" ஆக்கினை யைச் செலுத்துவார் என்று கூறினார். இயேசுவின் சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படியாமல் ஒருவர் இரட்சிக்கப்படவே முடியாது (மத். 7:21-23). இது கடினமானது என்று யாரேனும் மறுத்துக் கூறினால், நாமல்ல; தேவனே சட்டங்களை இயற்றுகிறார்

*என்று நாம் அவர்களுக்குப் பதில் அளிக்க முடியும். தேவனுடைய சட்டங்களுக்கு கீழ்ப்படியாத எவரேனும் பாதுகாப்பாக இருக்க முடியுமா என்று நாம் சந்தேகிக்கின்றோம்.*

*ஆக, நல்ல, நேர்மையான, உண்மையுள்ள மக்கள் உண்மையாகவே இழந்து போகப்படுவது சாத்தியமா? இதைப் பற்றி சிந்தியுங்கள்: கொர்நேலியு ஒரு நல்ல மனிதராகத்தான் இருந்தார் (அப். 10:1-4). அவர் இரட்சிப்படைய வேண்டிய வசனங்களைக் கேள்விப்பட வேண்டியிருந்ததால் (அப். 11:14, 15) அவர் இழந்து போகப்பட்ட நிலையில்தான் இருந்தார் என்று நாம் அறிகிறோம். எத்தியோப்பிய மந்திரியும் கூட தேவ பக்தியுள்ள மனிதராகவே இருந்தார், ஆனால் அவரும் கூட இரட்சிக்கப்பட வேண்டியிருந்தது. எனவே தேவன் பிலிப்புவை அவரிடத்தில் சென்று பிரசங்கிக்கும்படி அனுப்பினார் (அப். 8). சவுல் கிறிஸ்தவராகுமுன்பும் நல்லவராக, நேர்மையுள்ளவராகவே இருந்தார், ஆனால் கிறிஸ்தவராகும் முன்பு பாவிகளில் பிரதான பாவியாய் இருந்ததாக தம்மைப்பற்றி அவர் எண்ணினார் (1 தீமோ. 1:15). நீங்கள் நல்லொழுக்கம் உள்ளவராயிருக்கலாம், ஆனால் ஆவிக்குரிய முறையில் தேவனை விட்டுப் பிரிந்த நிலையில் இருக்கிறீர்கள்; உண்மையானவர்தான், ஆனால் உண்மையாகவே தவறிய நிலையில் இருக்கிறீர்கள்; நேர்மையானவர்தான், ஆனால் நேர்மையாகவே தவறிய நிலையில் இருக்கிறீர்கள்! நாம் எல்லாருமே இதற்கு எடுத்துக்காட்டுகளைக் கண்டிருக்கிறோம். உதாரணமாக, ஆஸ்திரேலியாவில் உள்ள ஒரு மருத்துவ மனையில் நான்கு குழந்தைகளின் மரணத்தில், ஒரு மருத்துவ தாதி அக்குழந்தைகளைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டாள். அவர்களுக்குத் தரும் மருந்தில் சர்க்கரைக்கு பதில் உப்பைக் கலந்து விட்டதாகத் தெரிந்தது. அவள் அறியாமல் அதைச் செய்தபடியினால் அவள் மீது போடப்பட்ட வழக்கு தள்ளுபடியானது. எப்படியிருப்பினும், யாரோ ஒருவர் சர்க்கரைக்குப் பதிலாக உப்பைக் கலந்துவிட்டார். அவரோ அல்லது அவளோ இதைச் செய்தபோது உண்மையான தவறென்று இது கணிக்கப்பட்டது. ஆனால் இதன் விளைவாக நான்கு பிள்ளைகள் மரிக்க வேண்டியதாயிற்று.*

*இதே போன்று இன்னோரு சம்பவத்தில், கானடாவின், சஸ்காட்ச்வேன் மாகாணத்தில், ரெஜினா என்ற இடத்தில் மருத்துவமனையொன்றில் தூய நீருக்குப் பதிலாக தவறிப்*

போய் போரிக் அமிலத்தை ஒரு மருத்துவத் தாதி கொடுத்த போது ஐந்து குழந்தைகள் இறந்து விட்டன. உண்மையோடு செய்த தவறு துயரத்திற்கு வழியாயிற்று.

நியுயார்க் நகரத்தில் புகைவண்டி நிலையத்தில் இருந்து கிளம்பிய ஒரு புகைவண்டியுடன் எதிரில் வேகமாக வந்த புகைவண்டியொன்று மோதி, அதன் விளைவாக ஐம்பது உயிர்கள் பறிக்கப்பட்டன. அதன் பொறியாளர், இயந்திரத்தின் அடியில் சிக்கிக்கொண்டார். அவரது மூக்கில் இருந்து இரத்தமும், கண்களில் இருந்து கண்ணீரும் வெளிவந்து கொண்டிருந்தது. மரண வலியில் அவர் ஒரு சிறு மஞ்சள் நிறக் காகிதத்துண்டை கையில் பிடித்திருந்தார். "இதை எடுத்துக் கொள்ளுங்கள், இதில் யாரோ ஒருவர் எனக்குத் தவறான கட்டளை கொடுத்துவிட்ட விபரம் உங்களுக்குத் தெரிய வரும்" என்றார் அவர். உண்மையான உள்ளத்தோடு கூட நாம் இருப்பினும், தவறான கட்டளைக்குக் கீழ்ப்படியும்போது துக்கமே ஏற்படும் - இன்னும் அநேகர் நம்மோடு செல்வார்கள்.[1]

ஆனால், நல்ல, நேர்மையான, உண்மையுள்ள மக்கள் இழந்து போகப்படக் கூடுமென்றால், இரண்டாவது கேள்வி இங்கு எழுகிறது.

## அவர்கள் இழந்துபோகப்படுவது எவ்விதம் சாத்தியமாகிறது?

தேவன் கிருபையுள்ளவரென்றால், இது போன்ற மக்கள் இழந்துபோகப்படுவது எவ்விதம் சாத்தியமாகிறது?

இந்தக் கேள்வியை விவாதிக்கத் தொடங்குகையில், பின்வருமாறு நாம் கூறுவது அவசியமாகிறது. வேதாகமம் சொல்வது எவ்வகையிலும் உண்மையுள்ளதென்றால், இழந்து போகப்படுபவர்கள் மற்றும் இரட்சிக்கப்படுகிறவர்கள் ஆகிய இரு தரப்பாருக்கும் இடையில் ஏதாவது ஓரிடத்தில் கோடு ஒன்று வரையப்பட வேண்டும். ஏனென்றால், சிலர் இழந்து போகப்பட வாய்ப்புண்டு. இவ்விடத்தில் நமது இருதயத்தில் அல்ல மாறாக நமது தலையை உபயோகித்துச் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. வேதாகமமானது, சிலர் இழந்து போகப்படக் கூடும் என்று போதிக்கிறது. சிலர் இழந்துபோகப் படுவார்களாகையால், வேதாகமத்தை விசுவாசிக்கின்ற ஒவ்வொருவரும் பின்வரும் பிரச்சனையை எதிர்கொள்ளு

கின்றனர்: தேவன் இந்த மக்களை ஏன் தண்டிக்க வேண்டும்? மற்றும் நல்ல, நேர்மையான, உண்மையுள்ள, வெளிப்படையான கிறிஸ்தவர்கள் கூட சுவிசேஷத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படியாதபோது இழக்கப்படுவார்கள் என்ற இந்த விஷயமானது, அதே அளவு வன்மையாக இழந்து போகப்படுகிற மற்றவர்களின் விஷயத்திலும் செயல்படுகிறது.

இழந்துபோகப்படுகிறவர்கள் மற்றும் இரட்சிக்கப்படுகிறவர்கள் ஆகியோருக்கு இடையில் அடையாளமாக ஒரு கோடு வரைவதைக் கற்பனை செய்து பாருங்கள். "ஞானஸ்நானம் பெறாத விசுவாசிகள்" யாவரும் "இழந்து போகப்பட்டவர்கள்" பக்கம் இருப்பது போல இந்தக் கோடு அமைகிறது என்று வைத்துக் கொள்வோம். யாரோ ஒருவர், ''நீங்கள் அப்படிச் செய்ய முடியாது" என்று கூறுகிறார். ஏன் கூடாது? "ஏனென்றால் ஞானஸ்நானம் பெறாத அந்த விசுவாசிகள் நல்ல, நேர்மையான, உண்மையுள்ள மக்களாய் இருக்கின்றனர். மேலும் தேவன், நல்ல, நேர்மையான உண்மையுள்ள மக்களை தண்டிக்க மாட்டார்.'' பின்பு, நாம் இந்தக் கோட்டை "ஞானஸ்நானம் பெறாத விசுவாசிகள்" யாவரும் "இரட்சிக்கப்படுகிறவர்கள்'' பக்கம் சேர்ந்திருப்பது போலச் சற்று தள்ளிப்போடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம், ஆனால் "கிறிஸ்தவரல்லாதவர்கள்" யாவரும் "இழந்து போகப்பட்டவர்கள்" பக்கம் உள்ளனர். "இல்லை, அவ்வாறு ஆகக்கூடாது" என்று இன்னொருவர் மறுப்புத் தெரிவிக்கிறார். ஏன் கூடாது? ஏனென்றால், அந்த மக்கள் நல்ல, ''நேர்மையான, உண்மையுள்ளவர்களாய் இருக்கிறார் கள். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காக மாத்திரம் தேவன் தம்மை விசுவாசிக்கிறவர்களைத் தண்டிக்க மாட்டார்." அடுத்து நாம் "கிறிஸ்தவரல்லாதவர்கள்" யாவரும் "இரட்சிக்கப்படுகிறவர்கள்'' பக்கம் இருப்பது போல் கோட்டைத் தள்ளிப் போடுவோம், ஆனால் "நாத்திகர்கள்" யாவரும் இழந்து போகப்படுகிறவர்கள் பக்கம் இருக்கின்றனர். "நிறுத்துங்கள், நீங்கள் அந்த இடத்தில் கோட்டை வரைய முடியாது'' என்று இன்னொருவர் வற்புறுத்துகிறார். ஏன் கூடாது? "ஏனென்றால் நாத்திகர்களில் சிலர் கிறிஸ்தவர்களைப் போலவே நல்ல ஒழுக்கமுள்ளவர்களாய் உள்ளனர். பரலோகத்திற்குப் போக வேண்டுமானால், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உண்மையுள்ளவராகவும், மற்ற மக்களை நல்ல முறையில்

*நடத்த வேண்டியதும் தானே! இதைச் செய்கிற எவரையும் தம்மை விசுவாசிக்கவில்லை என்பதற்காக மட்டும் தேவன் நிச்சயமாய்த் தண்டிக்கவே மாட்டார், தேவன் நிச்சயமாகவே, நல்ல, நேர்மையான, உண்மையுள்ள மக்களைத் தண்டிக்கவே மாட்டார்.'' எனவே நாத்திகர்கள் யாவரும் "இரட்சிக்கப்படுகிறவர்கள்'' பக்கம் இருப்பது போல் நாம் கோட்டைத் தள்ளிப் போட வேண்டியதாய் உள்ளது.*

*கடைசியாக, இவ்விடத்தில் ''இழந்து போகப்படுகிற வர்கள்" பக்கம் உள்ளவர்கள் நல்ல, நேர்மையான, உண்மை யுள்ளவர்கள் அல்ல என்று ஒப்புக்கொள்வதை நாம் காண முடியும். நம்மில் அநேகர், "ஆம், தேவன் நல்ல, நேர்மையான, உண்மையுள்ளவர்களாயிராத அவிசுவாசிகள் யாவரையும் தண்டிக்கக் கூடும்" என்று சொல்ல விரும்புவோம்.*

*தீய, நேர்மையற்ற, உண்மையற்ற மக்களுக்கு அருகில் இந்தக் கோட்டை வைக்கும்முன், மறுபடியும் சிலர் மறுப்பதை நாம் கேட்கின்றோம்: "அவர்கள் நல்லவர்கள் அல்ல என்பது உண்மைதான், ஆனால் ஏன் அவர்கள் நல்லவர்களாயில்லை?" ''ஏனென்றால், அவர்கள் மனதிலோ, அல்லது உடலிலோ வியாதியாயிருக்கின்றனர்'' என்று மனநோய் மருத்துவர் கூறுகிறார். "அவர்கள் கல்வியில் மிகவும் பின்தங்கியுள்ளனர்" என்று ஆசிரியர் கூறுகின்றார். ''அவர்கள் சமுதாயத்தில் நல்முறையில் வைக்கப்படவில்லை'' என்று சமூகவியலாளர் கூறுகின்றார். "அவர்களுடைய சூழ்நிலை அவர்களை இவ்வாறு ஆக்கிற்று. நீங்கள் அவர்களைக் குற்றம் சாட்ட முடியாது" என்று மனநூல் அறிஞர் கூறுகின்றார். "அவர்கள் நரகத்திற்கென்று முன் குறிக்கப்பட்டவர்கள்" என்று கால்வினிஸ்ட் கூறுகிறார். ''அவர்கள் ஞாயிறு வேதபாட சாலை செல்ல வாய்ப்புப் பெற்றிருக்கவில்லை எனவே அவர்கள் நன்கு அறியாமல் இருக்கிறார்கள்" என்று சபை அங்கத்தினர் கூறுகிறார். இந்த விளக்கங்களில் பெரும்பான்மையானவைகள் உண்மையைக் கொண்டவைகளாயுள்ளன. ஆகவே, கேள்வி இன்னும் நம்மிடம் உள்ளது: "தவறு என்பது அவர்களுடையதாய் இராத பட்சத்தில், நல்ல, நேர்மையான, உண்மையுள்ள ஜனங்களைத் தேவன் எப்படித் தண்டிக்கக் கூடும்?"*

*இவ்விடத்தில், நாம் வரைந்த கோட்டைத் தூக்கியெறிந்து விட நாம் தயாராகிறோம்! ஆனால் நம்மால் அது முடியாது! அதைத் தூக்கியெறிந்தால், நாம் நமது வேதாகமத்தையும் தூக்கி*

எறிந்தாக வேண்டும்! ஏனென்றால் சிலர் இழக்கப்பட்டுப் போவார்கள் என்று அது நமக்குப் போதிக்கின்றது.

அப்படியானால் அந்தக் கோட்டை எவ்விடத்தில் தான் வரைவது? அது ஏதாவது ஒரு இடத்தில் இருக்க வேண்டும் என்பதே கருத்தாகும். அந்தக் கோடு எவ்விடத்தில் இருந்த போதிலும், அதன் தப்பான பக்கம் இருப்பவர்கள் நல்ல, நேர்மையான, உண்மையுள்ளவர்கள் என்று நாம் எண்ணிய தற்கு மாறாக இருந்ததற்கு அவர்கள் மன்னிக்கப்பட வேண்டும்!

மாறுபாடுள்ள போதனையை விசுவாசிக்கும் நல்ல, நேர்மையான, உண்மையுள்ள மனிதர்கள் இழந்து போகப் படுவார்களா இல்லையா என்ற பிரச்சனையை, ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு அவசியம் என்று போதிக்கின்ற நாம் மட்டுமே எதிர் கொள்வதில்லை. எனது கோப்புகளில் புரொட்டஸ்டன்டு ஒருவரால் எழுதப்பட்ட "உண்மையான ஒரே மதம்" என்ற கட்டுரை ஒன்று உள்ளது. கிறிஸ்தவர் என்று தம்மை வெளிப்படுத்தும் ஒவ்வொருவருமே அதில் அவர் கூறுவதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்; வேதாகமத்தைப் பொறுத்த மட்டில், கிறிஸ்தவம் ஒன்றே உண்மையான மதம் ஆகும்! உலக ஜனங்களில் முப்பது சதவிகிதத்தினர் கிறிஸ்தவத்தை நம்பு கின்றனர். ஆனால் இது, மீதமுள்ள பெரும் ஜனக் கூட்டமாகிய 70 சதவிகிதத்தினர் இழந்துப்போகப்படுவார்கள் என்று கூறுகிறது! அவர் கூறுகின்ற "உண்மையான ஒரே மதத்தில்" இல்லாத நல்ல, நேர்மையான, உண்மையுள்ள ஜனங்களின் நிலை என்ன?

நல்ல, நேர்மையான, உண்மையுள்ள மனிதர்கள் இழந்து போகப்படுவதென்பது ஒரு உலகளாவிய பிரச்சனையாகும், இது கிறிஸ்துவைப்பற்றியோ அல்லது வேதாகமத்தைப் பற்றியோ எதையாவது நம்பிக் கொண்டிருக்கும் மக்களால் எதிர் கொள்ளப்படுகிறது. ஆனாலும், இன்னும் நாம் கேள்விக்குப் பதில் தரவில்லை: தேவன் இந்த மக்களை ஏன் தண்டிக்க வேண்டும்?

இந்தக் கேள்விக்கான பதில், வேதாகமத்தில் போதிக்கப் படும் மூன்று மாபெரும் சத்தியங்களில் அடங்கியுள்ளது: முதலாவது, எல்லாரும் பாவம் செய்துள்ளோம் (ரோமர் 3:23). இரண்டாவது, பாவிகளுக்கு மரணமே ஏற்றது, ரோமர் 6:23, "பாவத்தின் சம்பளம் மரணம் ..." என்று கூறுகிறது. "சம்பளம்"

என்ற வார்த்தை பாவத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் ஒன்றாகும், இதற்கு நம்மைத் தகுதியாக்கிவிட்டோம். மூன்றாவதாக, எந்த மனிதரும் தம்மைத்தாமே இரட்சித்துக் கொள்ள முடியாது. பாவத்தில் இருக்கையில் நாம் நம்பிக்கை யற்று, மரண ஆக்கினை பெற்றவர்களாயிருக்கிறோம். மேலும் நாம் உதவியற்றவர்களாகவும் இருக்கிறோம்; பாவத்திலிருந்து நம்மை நாமே தூக்கி எடுத்துக்கொள்ள முடியாது. இவ்வாறாக, ஒன்றுமில்லாதிருக்கிற நாம் செய்யும் எந்த ஒரு செயலும் நம்மை நமது பாவத்திலிருந்து விலக்கிக் கொள்ளப் போதுமானதாய் இருப்பதில்லை.

இன்று அநேகருடைய பிரச்சனை என்னவென்றால், அவர்கள் நன்னடக்கை, நேர்மை மற்றும் உண்மை ஆகியவை எவ்வாறேனும் அவர்களுடைய பாவங்களுக்கு பரிகாரம் தேடிவிடும் என்று அவர்கள் நம்புகின்றனர். தாங்கள் பாவம் செய்துள்ளோம் என்று அவர்கள் அறிந்துள்ளனர். ஆனால், தாங்கள் நல்ல, நேர்மையான, உண்மையுள்ளவர்களாய் இருந்தால், தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும் என்றும், தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் நிற்க முடியு மென்றும் அவர்கள் நம்புகின்றனர். ஆனால், வேதாகமம் இவ்வாறு போதிப்பது கிடையாது! மாறாக, அது, இவ்வுலகத் தின் எல்லா நன்னடக்கை, நேர்மை மற்றும் உண்மையெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஒரே ஒரு பாவத்தையாகிலும் நீக்க முடியாது என்றே போதிக்கிறது.

"நல்ல, நேர்மையான, உண்மையுள்ள மனிதர்கள் எப்படி இழந்து போகப்பட முடியும்?" மற்றும் "தேவன் இப்படிப் பட்ட மக்களை ஏன் தண்டிக்க வேண்டும்?" என்ற நமது கேள்வி களுக்குப் பதில் உள்ளது. தேவன் விரும்புவதால் அப்படிச் செய்வதில்லை; தேவன் அன்பாக இருக்கிறார்; எல்லா மனு ஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்றே அவர் விரும்புகிறார். அவர்கள் பாவம் செய்ததால், தேவனுக்கு எதிராக எழுந்ததால் இப்படிப்பட்ட தண்டனையைப் பெறுகின்றனர். அவர்கள் பாவத்தை எடுத்துப் போடும்படியாக, அவர்கள் ஒப்புக் கொடுக்கும் சொந்த நன்னடக்கை போதுமானதாயிருப்ப தில்லை.

# பின்பு, யார்தான் இரட்சிக்கப்படக் கூடும்?

பின்பு, யார்தான் இரட்சிக்கப்படக் கூடும்? நன்னடக்கை, நேர்மை, உண்மை ஆகியவை அவர்களுக்கு இரட்சிப்பை உத்தரவாதத்துடன் தர முடியாதெனில் - நல்ல, நேர்மையான, உண்மையுள்ள மக்கள் இழந்து போகப்படக் கூடுமெனில் - யார்தான் இரட்சிக்கப்படக் கூடும்? இதற்குப் பதில் மிகவும் எளியதாகும்: இவ்வுலகத்திலும், நித்தியத்திலும் இரட்சிப் படையக் கூடிய மக்கள் யாரெனில், தங்களது சொந்த நன்னடக்கை, நேர்மை, உண்மை ஆகியவற்றைச் சார்ந்திராமல், கிறிஸ்துவின் இரத்தத்தை சார்ந்திருப்பவர்களே ஆவர் - கிறிஸ்துவின் இரத்தத்தால் மட்டுமே இரட்சிக்கப் படுகின்றோம்!

அந்த இரத்தம் என்ன செய்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள்: *அது மனச்சாட்சியைத் தூய்மைப்படுத்துகின்றது:* "... ஜீவனுள்ள தேவனுக்கு ஊழிய ஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!'' (எபி. 9:14). *அந்த இரத்தம் மனிதர்களின் பாவங்களை மன்னிக்கின்றது:* "இது பாவமன்னிப்புக்கென்று அநேகருக்காகச் சிந்தப்படும் புது உடன்படிக்கைக்குரிய என் இரத்தமாய் இருக்கிறது" (மத். 26:28) என்று இயேசு கூறினார். *அது பாவங்களைக் கழுவுகின்றது.* வெளி. 1:5ல் "நம்மிடத்தில் அன்பு கூர்ந்து தமது (கிறிஸ்துவின்) இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி ..." என்று கூறுகிறது.

அவருடைய இரத்தம், நிச்சயமாகவே நம்மை இரட்சிக் கின்றது. நமக்கு ஆக்கினை அளித்து நம்மைக் கொன்று, தேவனிடத்திலிருந்து நம்மைப் பிரிக்கின்ற பாவத்தை அது நம்மிலிருந்து எடுத்துப் போடுகிறது. ஆனால் இது எவ்வாறு நடக்கிறது? இரத்தத்தின் மூலம் நாம் பாவமன்னிப்பை எவ்விதம் பெற முடியும்?

*ஞானஸ்நானத்தில் இந்த இரத்தம் நமது மனச்சாட்சியைத் தூய்மைப்படுத்துகின்றது,* 1 பேதுரு 3:20, 21 இவ்வாறு கூறுகிறது:

> ... அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப்

பேழையிலே சிலராகிய எட்டுப் பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்: அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கை யாயிரு  ந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினு டைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. ...

மேலும், ஞானஸ்நானத்தின் பொழுது இரத்தமானது, பாவத்தை மன்னித்து அகற்றுகிறது. அப். 2:38ல் விசுவாசித்த யூதர்களுக்கு, ''... மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்று கூறப்பட்டது. ஞானஸ்நானத்தில், இரத்தமானது பாவங்களைக் கழுவுகிறது. மனந்திரும்பிய சவுலுக்கு. "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு. ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறப்பட்டதாக அப். 22:16ல் நாம் படிக்கின்றோம். ஞானஸ்நானத்திற்கும் சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்துக் கும் என்ன தொடர்பு என்று நாம் கேட்டால், அதற்கு ரோமர் 6:3, 4 இவ்விதம் பதில் தருகிறது: "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்து வுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.'' கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பெற்றோம் என்று வேதாகமம் கூறும்போது, ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம் பற்றிய எவ்வித சந்தேகத்தையும் அது நீக்குகின்றது; மேலும் அது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்துடன் இணைந்ததாய் உள்ளது. இவ்வாறாக, நன்னடக்கை, நேர்மை, உண்மை ஆகியவை உங்களை இரட்சிக்காது; கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே அதைச் செய்ய முடியும்! ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட, நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற வேண்டும்!

## நாம் இரட்சிப்படைந்ததை நிச்சயப்படுத்துவது எப்படி?

நாம் இரட்சிப்படைந்ததை நிச்சயப்படுத்துவது எப்படி? தேவன் மற்றவர்களிடம் எவ்வாறு செயல்படுவார் என்பதைத் தவிர்த்து விட்டு, நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை எவ்விதம் நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும்? இதற்கு பதில் மிகவும் தெளிவானது:

முதலாவது, நாம் தேவனுடைய வசனத்தைக் கேள்விப் பட்டு ள்ளோமா?"ஆதலால் விசுவாசம் கே ள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17). இரண்டாவதாக, நாம் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்திருக்கிறோமா? "... நானே அவர் என்று விசுவாசியாவிட்டால், உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" (யோவா. 8:24). மூன்றாவதாக, நமது பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்பியிருக்கின்றோமா? "... நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக். 13:3). நான்காவது, கிறிஸ்துவில் உள்ள நமது விசுவாசத்தை அறிக்கையிட மனதாயிருக்கிறோமா? "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" (ரோமர் 10:10). ஐந்தாவதாக, பாவமன்னிப்புக்கென்று வேத வசனத்தின்படியான ஞானஸ்நானத்தை நாம் பெற்றுள்ளோமா? "... மனந்திரும்பி, ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38).

புதிய ஏற்பாட்டின் கிறிஸ்தவராக மட்டும் இருங்கள். அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால், நீங்கள் தேவனோடு பரலோகத்தில் நித்தியத்திற்கும் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையைப் பெறலாம். மற்றவர்களுக்கு அவர் என்ன செய்தபோதிலும், நீங்கள் தேவனுடைய வலது பக்கத்தில், கோட்டின் சரியான பக்கத்தில் நிற்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

## முடிவுரை

நாம் ஒரு கடைசி கேள்வியைக் கேட்கலாம்: நீங்கள் உண்மையிலேயே நல்ல, நேர்மையான, உண்மையுள்ளவரா?

*நீங்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்கு முழுமையாய்க் கீழ்ப்படியாமலிருக்கும் போது, உண்மையிலேயே "நல்லவரா"?*

*நீங்கள் சத்தியம் என்று கண்டறிந்ததற்குக் கீழ்ப்படியாமற் போனால், உண்மையிலேயே "நேர்மையானவரா"? ஒருவேளை நீங்கள், "ஆனால் சிலர் இன்னும் இதைக் காணவில்லையே, அவர்கள் கீழ்ப்படியவுமில்லையே" என்று கூறலாம். ஒருவேளை உங்களுக்குக் கிடைத்த வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்காமல் இருந்திருக்கலாம். "நான் இதை நன்கு அறியவில்லை" என்று அவர் நேர்மையுடன் கூறலாம். ஆனால், நன்கு அறிந்த, நன்கு கற்றபின் நீங்கள் அவ்வாறு கூற முடியுமா? நீங்கள் அறிந்த சத்தியத்தின்படி நடக்க மறுப்பது நேர்மையற்ற தன்மை யல்லவா?*

*வேதாகமத்தைக் கவனியாமலும், நீங்கள் சத்தியத்தை கேள்விப்படுவதற்கு முன்பு சென்ற வழியிலேயே செல்வதற்கும் நீங்கள் முடிவெடுத்தால், உண்மையிலேயே நீங்கள் "உண்மை யுள்ளவரா"? இவ்விஷயத்தில் நீங்கள் உண்மையிலேயே தேவனுடைய சித்தத்தை அறிந்து அவருக்குக் கீழ்ப்படிவதில் உண்மையுள்ளவராயிருக்கிறீர்களா?*

*மற்றவர்கள் இருக்கிறார்களோ இல்லையோ, நீங்கள் நல்ல, நேர்மையுள்ள, உண்மையானவராய் இருக்கிறீர்களா?*

---

குறிப்பு

[1]"Selected and adapted"*என்ற கட்டுரையில் இருந்து எடுத்தாளப்பட்டு, அர்க்கன்ஸாஸின் சீலோவாம் ஊற்று கிறிஸ்துவின் சபை அறிக்கையில் வெளியிடப்பட்டது.*